# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. **DHINATH DHALAM** Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 199 | வியாழக்கிழமை Thursday | 15.10.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


## 119வது ஜெயந்தி விழாவையொட்டி வருகிற 30ந்தேதி

# பசும்பொன் தேவர் நினைவிடத்தில் முதலமைச்சர் விஜய் மரியாதை



ராமநாதபுரம் மாவட்டம் கமுதி அருகே பசும்பொன் கிராமத்தில் முத்துராமலிங்க தேவரின் நினைவிடம் அமைந்துள்ளது. இங்கு ஆண்டுதோறும் அவரது ஜெயந்தி மற்றும் குருபூஜை விழா 3 நாட்கள் வெகு விமரிசையாக நடத்தப்படும். அதன்படி இந்த ஆண்டு 119-வது ஜெயந்தி மற்றும் 63-வது குருபூஜை விழா கொண்டாடப்படுகிறது.

முதல் நாளான 28-ந் தேதி முத்துராமலிங்க தேவரின் ஆன்மீக விழாவாகவும், 2-ம் நாளான 29-ந்தேதி அரசியல் விழாவாகவும், 3-ம் நாளான 30-ந்தேதி குருபூஜை விழாவாகவும் நடைபெறும். இதில் அரசியல் கட்சி தலைவர்கள் பங்கேற்று மரியாதை செலுத்துவார்கள்.

கடந்த ஆண்டு வரை தமிழகத்தை ஆட்சி செய்த திராவிட கட்சிகளின் முதலமைச்சர்களான ஜெயலலிதா, கருணாநிதி, மு.க.ஸ்டாலின், எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் தேவர் ஜெயந்தி விழாவில் பங்கேற்றுள்ளனர்.

அந்த வகையில் தற்போது தமிழகத்தில் புதிதாக ஆட்சிப்பொறுப்பேற்றுள்ள த.வெ.க. தலைவரும், முதலமைச்சருமான விஜய் பசும்பொன் முத்து ராமலிங்க தேவர் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்த இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

வருகிற 30-ந்தேதி நடைபெறும் தேவர் ஜெயந்தியன்று அனைத்து கட்சி தலைவர்களும் ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் கிராமத்தில் உள்ள முத்துராமலிங்க தேவர் நினைவிடத்தில் கூடி அவருக்கு மரியாதை செலுத்துவார்கள். கடந்தாண்டு துணை ஜனாதிபதியான தமிழகத்தை சேர்ந்த சி.பி.ராதாகிருஷ்ணன் மற்றும் த.வெ.க., சார்பில் முதன்முதலாக பொதுச்செயலாளர் ஆனந்த் உள்ளிட்டோர் பசும்பொன் கிராமத்திற்கு சென்று தேவருக்கு மரியாதை செலுத்தினார். அதேபோல் விஜய் பனையூரில் உள்ள த.வெ.க., அலுவலகத்தில் முத்துராம லிங்க தேவர் உருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினார். தற்போது அவர் முதலமைச்சராக பதவி வகித்து வருகிறார். இதையடுத்து முதன்முறையாகவும், முதலமைச்சராகவும் பசும்பொன்னில் நடைபெறும் தேவர் குருபூஜை விழாவில் பங்கேற்க இருப்பதாக கூறப்படுகிறது.

இதையொட்டி விழா நடைபெறும் வருகிற 30-ந்தேதி காலை சென்னையில் இருந்து சிறப்பு விமானம் மூலம் மதுரை வருகை தர இருக்கிறார். பின்னர் அங்கிருந்து காரில் புறப்படும் அவர் கோரிப்பாளையம் பகுதியில் உள்ள தேவர் சிலைக்கு மாலை அணிவிக்கிறார். இதையடுத்து வேனில் பசும்பொன் செல்லும் முதலமைச்சர் விஜய், முத்துராமலிங்க தேவர் நினைவிடத்தில் மலர் அஞ்சலி செலுத்த இருப்பதாகவும், அவரது புகழ் பரப்பும் வகையில் முக்கிய அறிவிப்பு ஒன்றை வெளியிட இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதலமைச்சர் விஜய்யின் பசும்பொன் வருகை குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு இன்னும் ஒரு-சில நாட்களில் வெளியாகலாம் என்றும், அதனைத் தொடர்ந்து முன்னேற்பாடுகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து உயர் போலீஸ் அதிகாரிகள் விரிவான ஆலோசனையில் ஈடுபட இருப்பதாகவும் கூறப்படுகிறது.

## மார்ச் 3ல் பிளஸ் 2, மார்ச் 17ல் 10ம் வகுப்பு

# பொதுத்தேர்வு தொடக்கம்: அமைச்சர் ராஜ்மோகன் தகவல்



சென்னை:

தமிழகத்தில் பிளஸ் 2, பிளஸ் 1 மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு கால அட்டவணை மற்றும் தேர்வு முடிவுகள் வெளியாகும் தேதிகளை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் (அக்.14) அறிவித்தார்.

சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் ராஜ்மோகன் அறிவித்ததாவது: பிளஸ் 1,பிளஸ் 2 பொதுத் தேர்வுகள் மார்ச் 3-ல் தொடங்கி மார்ச் 29 வரை நடைபெறுகிறது. பிளஸ் 1,பிளஸ் 2 தேர்வு முடிவுகள் மே-7-ல் வெளியிடப்படுகிறது.

பிப்ரவரி 19-ம் தேதி தொடங்கி பிப்.26-ம் தேதிக்குள் 10-ம் வகுப்புக்கான செயல்முறைத் தேர்வு நடைபெறுகிறது. பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு மார்ச் 17-ல் தொடங்கி ஏப்ரல் 12 வரை நடைபெறுகிறது.

10-ம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் மே.20-ல் வெளியிடப்படுகிறது.

பத்தாம் வகுப்பு தேர்வு அட்டவணை:

தமிழ்: 17.03.2027

ஆங்கிலம்: 25.03.2027

கணிதம்: 31.03.2027

அறிவியல்: 05.04.2027

சமூக அறிவியல்: 09.04.2027

விருப்பப் பாடம்: 12.04.2027

12-ம் வகுப்பு தேர்வு அட்டவணை:

தமிழ்: 03.03.2027

ஆங்கிலம்: 08.03.2027

வேதியியல்: 12.03.2027

உயிரியல்: 19.03.2027

இயற்பியல்: 23.03.2027

கணிதம்: 29.03.2027

கணக்குப் பதிவியல்: 12.03.2027

கணினி அறிவியல்: 15.03.2027

வரலாறு: 19.03.2027

தாவரவியல்: 19.03.2027

பொருளியல்: 23.03.2027

விலங்கியல்: 29.03.2027

தேதிகளில் தேர்வு நடைபெறுகிறது என்று அமைச்சர் அறிவித்தார்.

10-ம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் மே.20-ம், பிளஸ் 1, பிளஸ் 2 தேர்வு முடிவுகள் மே 7-ம் தேதியும் வெளியாகிறது.

## "எத்தனை இளைஞர்களின் குரலை பாஜகவால் ஒடுக்க முடியும்?"

# டெல்லியில் சிஜேபி நிர்வாகிகள் கைதுக்கு மு.க.ஸ்டாலின் கண்டனம்



சென்னை: "எத்தனை இளைஞர்களின் குரலைத்தான் பாஜகவால் ஒடுக்க முடியும்? சிஜேபிக்கு தேவையான அனைத்து சட்ட உதவிகளையும் திமுக வழங்கும்" என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தள பக்கத்தில், "எத்தனை போராட்டக்காரர்களை இந்த அரசால் கைது செய்ய முடியும்? எத்தனை இளைஞர்களின் குரலை பாஜகவால் ஒடுக்க முடியும்? அவர்கள் சிறையில் அடைக்கும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க, எந்த அரசியல் கட்சியையும் சாராத சாதாரண பொதுமக்களும் பெருமளவில் வீதிக்கு வந்து, மக்கள் சக்தி என்னவென்பதை அவர்களுக்குக் காட்டுவார்கள்.

அஷுதோஷ் ரங்கா மற்றும் சவுரவ் தாஸ் ஆகியோருக்கு எனது ஆதரவும் தோழமையும். அவர்களுக்குத் தேவையான அனைத்துச் சட்ட உதவிகளை வழங்கவும், வழக்கறிஞர்களை ஏற்பாடு செய்யவும் திமுக தயாராக உள்ளது" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

டெல்லியில் ஜந்தர் மந்தர் பகுதியில் நேற்று காலை ஒன்றுகூடி போராட்டத்தில் ஈடுபட முயன்ற அசுதோஷ் ரங்கா, சவுரவ் தாஸ் மற்றும் அஜிங்க்யா ஷிண்டே உள்ளிட்ட சிஜேபி கட்சி நிர்வாகிகளை டெல்லி காவல்துறை கைது செய்தனர்.

டெல்லி காவல்துறை திங்கள்கிழமையன்று ஜந்தர் மந்தரை போராட்டங்கள் நடத்தும் அதிகாரப்பூர்வ இடங்களின் பட்டியலிலிருந்து நீக்கியது. அதற்கு மாற்றாக, போராட்டங்கள் நடத்த ராம் லீலா மைதானம், புராரி மைதானம் மற்றும் கிழக்கு டெல்லியில் உள்ள சி.பி.டி. மைதானம் ஆகிய மூன்று மாற்று இடங்களை அறிவித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், "எத்தனை இளைஞர்களின் குரலைத்தான் பாஜகவால் ஒடுக்க முடியும்? சிஜேபிக்கு தேவையான அனைத்து சட்ட உதவிகளையும் திமுக வழங்கும்" என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt


# வடகிழக்கு பருவமழை தொடக்கம்... 6 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு



தென்மேற்குப் பருவமழை நாட்டின் மீதமுள்ள பகுதிகளிலிருந்து முழுவதுமாக விலகுவதற்கான சூழல் உருவாகி வருகிறது, அதே நேரத்தில் வடகிழக்குப் பருவமழை தென்னிந்தியாவின் தென் பகுதிகளில் தொடங்குவதற்கான சாதகமான நிலை காணப்படுகிறது.

சுமார் 4.5 கிமீ உயரத்தில் மத்திய கேரளா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது.

சுமார் 1.5 கிமீ உயரம் வரை குமரிக்கடல் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது.

சுமார் 1. கிமீ உயரம் வரை குமரிக்கடல் பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல சுழற்சியிலிருந்து ஒடிசா கடலோ பகுதிகளுக்கு அப்பால் உள்ள வடமேற்கு வங்கக்கடல் பகுதிகள் வரை, மன்னார் வளைகுடா மற்றும் தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகள் வழியாக ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை (Trough) நிலவுகிறது.

15-10-2026: விருதுநகர் மாவட்டத்தின் மலை பகுதிகள் மற்றும் நீலகிரி, கோயம்புத்தூர், தேனி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய கன முதல் மிக கன மழை பெய்யக்கூடும்.

தஞ்சாவூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், கடலூர், தென்காசி, கன்னியாகுமரி, கள்ளக்குறிச்சி, சேலம், திருச்சிராப்பள்ளி, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, ராணிப்பேட்டை, திருப்பூர், திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய கன மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் அநேக இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

### கோவை மருதமலை அடிவார பகுதியில் உள்ள

# ஸ்ரீ வள்ளியம்மன் திருக்கோவிலில் 10 ம் ஆண்டு நவராத்திரி விழாவையொட்டி 1000க்கும் மேற்பட்ட கொளு பொம்மைகளுடன், விநாயகர் கிரிக்கேட் ஆடும் காட்சி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது



கோவை மருதமலை அடிவாரத்தில் அருள்மிகு ஸ்ரீ வள்ளி அம்மன் திருக்கோவில் அமைந்துள்ளது .இத்திருக்கோவில் ஆண்டுதோறும் நவராத்திரியை முன்னிட்டு, கொளு உற்சவ விழா வெகு விமரிசியாக கொண்டாடப்படுவது வழக்கம். இதன் தொடர்ச்சியாக 10 ஆம் ஆண்டு நவராத்திரிவிழா நிகழ்ச்சிகள் தற்போது நடைபெற்று வருகின்றது. மூன்றாவது நாளான இன்று, சிறப்பு நடன நிகழ்ச்சிகளுடன்,கொளு பொம்மைகள் கண்காட்சியும் நடைபெற்றது

இக்கண்காட்சியில், சுமார் 1000த்திற்க்கும் மேற்பட்ட, பொம்மைகள் காட்சிபடுத்த பட்டுள்ளது. பாராலிம்பிக் கமிட்டி ஆப் இந்தியா அமைப்பின் துணைத் தலைவர் இன்ஜினியர் சந்திரசேகர் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், ஆலயம் நல்வாழ்வு அறக்கட்டளையின் இயக்குனர் டாக்டர் ஷர்மிளா சந்திரசேகர் முன்னிலை வகித்தார். விழாவுக்கான ஏற்பாடுகளை ஸ்ரீவள்ளியம்மன்அறக்கட்டளையின் நிறுவன தலைவர் அன்பு என்கின்ற செந்தில் பிரபு செய்திருந்தார். இந்த கொளு, கண்காட்சியில் வைக்கப்பட்ட நவக்கிரக ஸ்தலம், கல்யாண விருந்து, மணமக்கள் வீதி உலா, மக்களின் இயல்பான வாழ்க்கை,, விவசாயக்காலம், செழிப்பான கிராமங்கள், ஜல்லிக்கட்டு, குதிரை ஆட்டம், கரகாட்டம், கிருஷ்ணலீலா, ஐயப்பன் மலை, பதினெட்டாம்படி ஐயப்பன் பஜனை,

கும்பகோணம் மரப்பாச்சி பொம்மைகள், 15 வகையான சித்தர்கள் பெண்மகள், ருது சீர்படலம்,திருக்கோவில்பூஜை, மற்றும் தரிசன காலம், கல்யாண காட்சி, திருவிளக்கு பூஜை, சிறுவர் பூங்கா, திருக்கைலாயம், திருமலை வெங்கடேச பெருமாள் தரிசனம், ஆஞ்சநேயர் உற்சவம், சஞ்சீவி மலை, என பல்வேறு கொளு பொம்மைகள் காட்சிப்படுத்தப்பட்டு இருந்தாலும், இந்திர சபையில் கிரிக்கெட் விளையாடும் விநாயகர் பொம்மைகள் அனைவரையும் வெகுவாக கவர்ந்துள்ளது. நவராத்திரி உற்ச விழாவை முன்னிட்டு சுமார் பத்து நாட்களும் இங்கு சிறப்பு வழிபாடுகள், சிறப்பு பூஜைகள், கலை நிகழ்ச்சிகளுடன், அம்மனுக்கு அபிஷேக ஆராதனைகளும் நடைபெற உள்ளது. விழாவின் இறுதியில் கலந்து கொள்ளும் பக்தர்கள் அனைவருக்கும் இரவு உணவுடன் ஒவ்வொரு நாள் விழாவும் நிறைவு பெற்று வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# மதுராந்தகத்தில் ராஜா துணிக்கடை திறப்பு விழா தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் விக்ரம் ராஜா பங்கேற்பு



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தனியார் துணிக்கடை திறப்பு விழாவிற்கு வருகைதந்த தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் விக்கிரமராஜா அப்போது செய்தியாளர்களை சந்தித்து பேசுகையில்

"தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பு ஜிஎஸ்டி வரிவிதிப்புக்கு 0.4%சேவை வரியை ரத்து செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு முழுவதும் பேரமைப்பினுடைய மாநிலத்தினுடைய ஒவ்வொரு மாவட்டத்தினுடைய நிர்வாகிகளும் போராடினோம். 12ம் தேதி காலையில் போராட்டம், மாலையில் டெல்லியில் மத்திய அமைச்சரோடு சந்திப்பு, அடுத்த நாள் மாண்புமிகு மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் அந்த சட்டத்தை தள்ளி வைத்திருக்கிறார்கள்.

இது தற்காலிகம் என்று சொன்னாலும் கூட, ஒட்டுமொத்தமாக, நிரந்தரமாக அதை திரும்ப பெற வேண்டும் என்பதிலே தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பு உறுதியாக இருக்கிறது.,மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகுபிரதமருக்கும் எங்களது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

அதேபோன்று இந்த காலச்சூழலில் விலைவாசி என்பது கட்டுக்குள் அடங்காமல் இருக்கிறது. மாண்புமிகு மத்திய நிதி அமைச்சரோடு பேசுகிற பொழுது, அரிசி விலை உயர்வை கட்டுப்படுத்துவதற்கு ஏற்றுமதியை கட்டுப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி இருக்கிறோம்.,

ஏனெனில் சர்க்கரை விலை வேகமாக உயர்ந்த பொழுது, சர்க்கரை இறக்குமதி செய்த பிறகுதான் விலை குறைந்தது. அந்த நிலைப்பாட்டை உறுதியாக எடுப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள்.,

அதேபோன்று இன்று தமிழகத்திலே நீர் ராதாரத்தை பெருக்குவதற்கு மூலக்காரணமான நிதி ஒதுக்கப்பட வேண்டும். எத்தனையோ கோடிகளை நாம் இனாமாக கொடுத்துக்கொண்டிருக்கிறோம். மக்கள் புரிந்து கொள்ள வேண்டும், 'இனா' என்ற வாசகத்தை தவிர்க்கப்பட வேண்டும். இந்த நீராதாரத்தை பெருக்கினால் மட்டும்தான் விவசாயம் செழிக்கும், உற்பத்திகள் பெருக்கும், நவதானிய பொருள் கிடைக்கும். இல்லை என்று சொன்னால் எல்லார் வீட்டிலேயும் பணம் இருக்கும், தங்கம் இருக்கும், சாப்பிடுவதற்கு பொருள் இருக்காது என்பதை எச்சரிக்கை உணர்வோடு பதிவு செய்து கொள்ளுகிறேன்.

ஜிஎஸ்டி வரிவிதிப்பு வந்து ரொம்ப வரி போட்டுருக்காங்க...

அதைதற்காலிகமாகத்தான் தள்ளி வச்சிருக்காங்க,நிரந்தரமாகதிரும்ப பெற வேண்டும் என்பதில் வலியுறுத்தவும் உறுதியாக இருக்கிறோம். புதிய முதலமைச்சரை... ஏதாவது மாற்றம் இருக்குதா என்ற கேள்விக்கு

இல்லை, சட்டத்திலே நாங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதிதாக பொறுப்பேற்று இருக்கிறார்கள். அவர்களை சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கி கேட்டிருக்கிறோம். குறிப்பாக சாமானிய வணிகர்களை பாதுகாப்பதற்கு சிறப்பு பாதுகாப்பு சட்டம் ஒன்றை நிறைவேற்ற வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம். ஏன்னா கார்ப்பரேட் கம்பெனியினுடைய ஆதிக்கம் நேத்து கூட பெரிய நிறுவனம் ஒன்று சென்னையில் கடந்து வந்தார்கள். ஒரு அது போன்ற ஒரு நிறுவனம்திறந்தால்,பதினைந்து கிலோ மீட்டருக்கு சிறுசிறு வியாபாரிகள் எல்லாம் கடையை மூடக்கூடிய அவலம் ஏற்பட்டு கொண்டிருக்கிறது. லட்சக்கணக்கான பேர்களுக்கு வேலை தந்து கொண்டிருக்கின்ற சாமானியர்களை பாதுகாப்பதற்கு சிறப்பு பாதுகாப்பு சட்டம் ஒன்றை நிறைவேற்ற வேண்டும் என்பதிலே தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பு உறுதியாக இருக்கிறது.

இந்தியாவிலேயே வந்து வியாபாரிகள் தமிழ்நாட்டில் அதிகமா இருக்கு... தமிழக அரசுக்கு என்ன கோரிக்கை வைக்கிறீர்கள்?

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதை விவசாயிகள், வணிகர்கள் என்ற பிரதிநிதிகளும் அழைத்து ஆலோசனைபெற வேண்டும். நாங்கள் ஆலோசனை வழங்குவதற்கும், விலை குறைப்பதற்கும் என்ன ஆயத்தப்பணி செய்யணுமோ செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்."

# தூத்துக்குடியில் நிலத்தடி நீரை உறிஞ்சும் நிறுவனங்கள் மீது குண்டர் சட்டத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்: இல்லையெனில் மாபெரும் தொடர் போராட்டம்



தூத்துக்குடி மாநகராட்சி மற்றும் சிப்காட் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நிலத்தடி நீரைத் தொடர்ந்து உறிஞ்சி எடுக்கும் தனியார் நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில் பொதுமக்கள், விவசாயிகளைத் திரட்டி மாபெரும் தொடர் போராட்டம் நடத்தப்படும் என வழக்கறிஞர் செல்வம் கிறிஸ்டோபர் கோரிக்கை விடுத்துள்ளார்.தூத்துக்குடி பகுதியில் மழைப்பொழிவு குறைவால் குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருவதுடன், விவசாயமும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், சில தனியார் நிறுவனங்கள் நிலத்தடி நீரைத் தொடர்ந்து உறிஞ்சி எடுத்து வருவதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. மாநகராட்சி ஆணையர் பிரியங்காவிடம் பல்வேறு புகார்கள் அளித்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், ஆய்வு என்ற பெயரில் காலதாமதம் செய்யப்படுவதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.நிலத்தடி நீர் உறிஞ்சப்படுவதால் நீர்மட்டம் குறைவதுடன், கடல்நீர் உட்புகுந்து நிலத்தடி நீரின் உப்புத்தன்மை அதிகரிக்கும் அபாயம் உள்ளதாகவும், இதனால் விவசாயம் மற்றும் பொதுமக்களின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்படக்கூடும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. எனவே, நிலத்தடி நீரை அனுமதியின்றி உறிஞ்சும் நிறுவனங்களை ஆய்வு செய்து, விதிமீறல்கள் உறுதி செய்யப்பட்டால் அவற்றுக்குசீல்வைக்கவேண்டும். மேலும், சட்டப்படி உரிய குற்றவியல் நடவடிக்கை எடுப்பதுடன், தகுந்த சட்ட அடிப்படையில் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்தக் கோரிக்கைகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், பொதுமக்களையும் விவசாயிகளையும் ஒன்றுதிரட்டி மாநகராட்சி அலுவலகம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மாபெரும் தொடர் போராட்டம் நடத்தப்படும் என்று வழக்கறிஞர் செல்வம் கிறிஸ்டோபர் தெரிவித்தார்.

# நல்லூரில் சமுதாய வளைகாப்பு விழா: கர்ப்பிணிப் பெண்களுக்கு வளையல் அணிவித்து சீர்வரிசை வழங்கல்!



கடலூர் மாவட்டம், நல்லூரில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, நல்லூர் வட்டார ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில் சமுதாய வளைகாப்பு விழா - 2026 நல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கூட்ட அரங்கில் நடைபெற்றது. விழாவில் தமிழக வெற்றிக் கழகத்தின் கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் எருமனூர் எஸ். விஜய் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு,கர்ப்பிணிப் பெண்களுக்கு வளையல் அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தார். அவருடன் நல்லூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் எஸ்.பி. செல்வமணி, நல்லூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் ஆர்.ரஞ்சித் ஆகியோரும் பங்கேற்றனர்.

விழாவில் கர்ப்பிணிப் பெண்களுக்கு வளைகாப்பு நடத்தப்பட்டு, அவர்களின் தாய்மை பயணம் சிறப்பாக அமைய வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டன. இதனிடையே, வேப்பூர் ரோட்டரி சங்கத்தின் சார்பில் கர்ப்பிணிப் பெண்களுக்குத் தேவையானபொருட்கள் அடங்கியசீர்வரிசைத்தொகுப்புப் பைகள் வழங்கப்பட்டன. ரோட்டரி சங்கத் தலைவர் அ. களத்தூர் ராமலிங்கம் சீர்வரிசைப் பைகளை வழங்கினார். அப்போது ரோட்டரி சங்க மாவட்டத் துணை ஆளுநர் ஜனனி, டெக்ஸ் வேப்பூர் தாசன், வேப்பூர் ரோட்டரி சங்க முன்னாள் தலைவர் ஆனந்தன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு கர்ப்பிணிப் பெண்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் தமிழக வெற்றிக் கழகத்தின் ஒன்றிய நிர்வாகிகள் ராதாகிருஷ்ணன், ராம்குமார், கே. மணிகண்டன், பாஸ்கர், மும்மூர்த்தி, நாகராஜன், சூர்யா கட்டிமுத்து, எஸ். மணிகண்டன், தங்கப்பிரகாஷ், ஆனந்தன், வாசுதேவன், ராஜி மற்றும் மகளிர் அணியினர் கலந்து கொண்டனர். அரசு சார்பில் குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலக மேற்பார்வையாளர்கள் தமிழரசி, பாரதி, ஜோதி, அந்தோணி அம்மாள், இளநிலை உதவியாளர் விநாயகம், குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர், கண்காணிப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# ராணிப்பேட்டை மாவட்டம் மழையூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் போதைப்பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சி



ராணிப்பேட்டை மாவட்டம்மழையூர் அரசினர் உயர்நிலைப் பள்ளியில்போதைப்பொருள் தடுப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடை பெற்றது.

இந்நிகழ்ச்சிக்குப் பள்ளியின் பொறுப்புத் தலைமை ஆசிரியர் திரு. த. சதீஷ் அவர்கள் தலைமை தாங்கினார்.

இந்நிகழ்ச்சியில்சிறப்பு விருந்தினராகக் கலவை காவல் நிலைய ஆய்வாளர் திரு. ரமேஷ் பாபு அவர்கள் கலந்துகொண்டு,போதைப்பொருட்களால் ஏற்படும் தீமைகள் மற்றும் விழிப்புணர்வு குறித்த முக்கியக் கருத்துகளை மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்.

மேலும்,போதைதடுப்புக் குழு ஒருங்கிணைப்பாளர் திரு.ஏ.ராஜ்குமார் அவர்களும்,பள்ளி ஆசிரியர்கள் திருமதி கே. ஜெயஸ்ரீ,திரு.எம்.சுரேஷ் மணி மற்றும் திருமதி சே. ஜீவிதா ஆகியோரும் கலந்துகொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.

# அகிலி ஊராட்சியில் புதிய அஞ்சலக கட்டிடம் திறப்பு விழா



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம் அகிலி ஊராட்சியில் அமைந்துள்ள செண்டிவாக்கம் கிராமத்தில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் ஊராட்சி மன்ற தலைவர் சொந்த முதலீட்டில் ரூபாய் 2.50 லட்சம் மதிப்பிட்டில் புதிய அஞ்சலக கட்டிட திறப்பு விழா ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி அருகில் ஊராட்சி மன்றதலைவர் மகாலட்சுமி நந்தகுமார் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது இவ்விழாவில் தபாலதிபர் ரூபினி உதவியாளர்கள் ஷாலினி. சண்முகம் ஊராட்சி செயலாளர் வீரக்குமார் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் வார்டு உறுப்பினர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடியில் மத்திய அரசின் 20க்கும் மேற்பட்ட திட்டங்களை விளக்கும் ரங்கோலி கோலம்!

## பிரதமர் மோடியின் 25 ஆண்டுகால மக்கள் சேவையைப் போற்றும் வகையில் பாஜக விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது



பிரதமர் நரேந்திர மோடியின் 25 ஆண்டுகால பொதுவாழ்க்கை மற்றும் மக்கள் சேவையைப் போற்றும் வகையில், தூத்துக்குடி தெற்கு மாவட்ட பாஜக சார்பில், சிவன் கோவில் தேரடி முன்பு மத்திய அரசின் மக்கள் நலத் திட்டங்களை விளக்கும் ரங்கோலி கோலங்கள் வரையும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

பிரதமர் மோடியின் பிறந்தநாளைமுன்னிட்டு செப்டம்பர் 17-ம் தேதி தொடங்கப்பட்ட ஒரு மாத கால சேவைப் பணிகளின் ஒரு பகுதியாக இந் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில்ஜன்தன்யோஜனா, ஸ்வச் பாரத் மிஷன், பிரதம மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா, ஸ்டார்ட்அப் இந்தியா, பிரதம மந்திரி உஜ்வாலா யோஜனா உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட மத்திய அரசின் மக்கள் நலத் திட்டங்கள் வண்ணமயமானரங்கோலி கோலங்கள் மூலம் காட்சிப்படுத்தப்பட்டன. மத்திய அரசின் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடம் ஏற்படுத்தும் வகையில் கலைநயத்துடன் வரையப்பட்ட கோலங்களை பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.

நிகழ்ச்சியில் தூத்துக்குடி தெற்கு மாவட்ட பாஜக பொதுச் செயலாளர் ஏ.எம். ராஜேஷ், மாநில செயற்குழு உறுப்பினர் விவேகம் ரமேஷ், மாவட்டத் துணைத் தலைவர் சிவராமன் காளிராஜா, கிழக்கு மண்டலத் தலைவர் சண்முகசுந்தரம், வணிகப் பிரிவு மாவட்டத் தலைவர் செந்தில், மாவட்டச் செயலாளர் செல்வி, இளைஞரணி சக்திவேல், ஊடகப் பிரிவு மாவட்டத் தலைவர் ஜெயக்குமார், ஓபிசி மாவட்டப் பொதுச் செயலாளர் வன்னியராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மேலும், நிகழ்ச்சிப் பொறுப்பாளர்கள் டாக்டர் சுதா, மகளிர் அணி மாவட்டத் தலைவர் வெள்ளத்தாய், ஆன்மிகப் பிரிவு மாவட்டத் துணைத் தலைவர் உஷா, கிழக்கு மண்டலச் செயலாளர் ஜெயரூபி மற்றும் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் பங்கேற்றனர்.



மதுரை மாவட்டம் தமுக்கம் மைதானம் மாநாட்டு மையத்தில் பதிவு பெற்ற அறிவுசார் சொத்துரிமை (IPR), புவிசார் குறியீடு (GI) பெற்ற மற்றும் ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு (ODOP) தயாரிப்புகளைக் காட்சிப்படுத்தும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கினை துவக்கி வைத்து பார்வையிட்டு சிறப்புரை ஆற்றினார். மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.அ.கல்லாணை , மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.எம்.கோபிசன் அவர்கள், மாநகராட்சி மேயர் (பொ) / துணை மேயர் திரு.தி.நாகராஜன் அவர்கள், மாநகராட்சி ஆணையாளர் திரு.கௌரவ் குமார்,ஆகியோர் உடன் உள்ளனர்.



மதுரைP. அய்யம்பெருமாள் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிப்பில் பெரும் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ள 'ஜெயிலர் 2' திரைப்படம் நாளை உலகமெங்கும் வெளியாகவுள்ள நிலையில், மதுரை திருப்பரங்குன்றம் வெயில் வந்த அம்மன் கோவிலில் ரஜினிகாந்த் ரசிகர்கள் சிறப்பு வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

# ஈரோடு மாநகரில் நள்ளிரவில் போலீசார் தீவிர ரோந்து: குற்றத்தடுப்பு விழிப்புணர்வு



ஈரோடு மாநகர் பகுதியில் குற்றச் சம்பவங்களைத் தடுக்கும் பொருட்டு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி உத்தரவின் பேரில், டவுன் டிஎஸ்பி முத்துக்குமார் மேற்பார்வையில் இன்ஸ்பெக்டர்கள் ரவி மற்றும் ராமகிருஷ்ணன் தலைமையில் 20-க்கும் மேற்பட்ட போலீசார் நேற்று நள்ளிரவில் தீவிர ரோந்து மற்றும் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர்; குறிப்பாக செல்போன் திருட்டு, வழிப்பறி உள்ளிட்ட குற்றங்களைத் தடுக்கும் நோக்கில் ஸ்வஸ்திக் கார்னர், பேருந்து நிலையம் மற்றும் மார்க்கெட் சுற்றுவட்டாரப் பகுதிகளில் தீவிரக் கண்காணிப்புப் பணியை மேற்கொண்ட காவலர்கள், பேருந்து நிலையப் பயணிகளிடம் பிக்பாக்கெட் நபர்களிடம் எச்சரிக்கையாக இருக்குமாறும், சந்தேகப்படும்படி யாரேனும் சுற்றித்திரிந்தால் உடனடியாகக்காவல்நிலையத்திற்குத்தகவல் தெரிவிக்குமாறும் விழிப்புணர்வு ஏற்படுத்திய நிலையில், போலீசாரின் இந்த தொடர் ரோந்து பணியால் மாநகரில் குற்றச் சம்பவங்கள் பெருமளவு குறைந்துள்ளதாகப் பொதுமக்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.



★தென்காசி மாவட்டம், இ.சி.ஈ அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி கலையரங்கத்தில் இன்று 13.10.2026 நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் / தென்காசி மாவட்ட பொறுப்பு அமைச்சர் மரு.வி.கே.ராஜீவ் அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையில் தற்காலிக/ ஒப்பந்த அடிப்படையில் 5 செவிலியர்களுக்கு நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் திரு. ரஞ்ஜீத்சிங், இ.ஆ.ப., அவர்கள், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.மா.வீராசாமி அவர்கள், தென்காசி சார் ஆட்சியர் திருமதி.வைஷ்ணவி பால், இ.ஆ.ப., அவர்கள், திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை முனைவர் ஆ.ரா.சிவராமன் அவர்கள், புளியங்குடி நகர்மன்ற தலைவர் திருமதி. விஜயா சௌந்திர பாண்டியன் அவர்கள், மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் திரு.தி.உதயகிருஷ்ணன் அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.★



தென்காசி மாவட்டம், இ.சி.ஈ அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி கலையரங்கத்தில் 6 நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் / தென்காசி மாவட்ட பொறுப்பு அமைச்சர் மரு. வி.கே.ராஜீவ் அவர்கள் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 20 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு சிறப்பு கைபேசிகளும், 2 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு மின்மோட்டார் பொறுத்தப்பட்ட சக்கர நாற்காலிகளையும் வழங்கினார். ஆட்சியர் ரஞ்ஜீத்சிங், வருவாய் அலுவலர் மா.வீராசாமி , தென்காசி சார் ஆட்சியர் வைஷ்ணவி பால், திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை முனைவர் ஆ.ரா.சிவராமன் , ஆகியோர் உடன் உள்ளனர்.



★தென்காசி மாவட்டம், இ.சி.ஈ அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி கலையரங்கத்தில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் / தென்காசி மாவட்ட பொறுப்பு அமைச்சர் மரு. வி.கே.ராஜீவ் அவர்கள் பெண்களின் பாதுகாப்பிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கும் சிங்கப்பெண் அதிரடிப்படையினை பார்வையிட்டார். மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத்சிங், உடன் உள்ளனர்.

# IOV ஈரோடு கிளை சார்பில் மதிப்பீட்டாளர்கள் தின விழா: மூத்த மதிப்பீட்டாளர்களுக்குச் சிறப்பு கௌரவம்



ஈரோடு: இந்திய மதிப்பீட்டாளர்கள் நிறுவனம் (Institution of Valuers – IOV) ஈரோடு கிளை சார்பில் மதிப்பீட்டாளர்கள் தின விழா, ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் மற்றும் மூத்த மதிப்பீட்டாளர்களைக் கௌரவிக்கும் விழா ஆகியவை ஈரோட்டில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு ஈரோடு கிளைத் தலைவர் பொறியாளர் பால் விஜயகுமார் தலைமை தாங்க, கிளைச் செயலாளர் ஆர். செந்தாமரை மற்றும் பொருளாளர் எம்.கே. கந்தசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மதிப்பீட்டுத் துறையில் நீண்டகால அனுபவமும் அளப்பரிய பங்களிப்பும் ஆற்றிய மூத்த மதிப்பீட்டாளர்களான ஆர்.மோகன்ராஜ், மணிகண்டன் மற்றும் சுந்தர்ராஜ் ஆகியோர் அவர்களது தொழில்முறை அர்ப்பணிப்பைப் பாராட்டி விழாவில் பொன்னாடை போர்த்திச் சிறப்பி க்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து நடைபெற்ற ஆண்டு பொதுக்குழுக் கூட்டத்தில் கிளையின் செயல்பாடுகள், வரவு-செலவு அறிக்கை மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதுடன்,

இளம் மதிப்பீட்டாளர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தப்பட்டது. இந்நிகழ்வில் அமைப்பின் முன்னாள் தலைவர்கள், நிர்வாகிகள் மற்றும் மதிப்பீட்டாளர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.

# ஈரோட்டில் லலிதா ஜீவல்லரியின் பிரம்மாண்ட 67வது புதிய கிளை திறப்பு அதிரடி சலுகைகளை அறிவித்தார் தலைவர் கிரண் குமார்



ஈரோடு காவேரி சாலையில் பிரபல தங்க நகை விற்பனை நிறுவனமான 'லலிதாஜூவல்லரி'-யின் 67-வது புதிய பிரம்மாண்ட கிளை கோலாகலமாகத் தொடங்கப்பட்டது. ஈரோடு மாவட்டத்திலேயே மிக பிரம்மாண்ட பரப்பளவிலும், நவீன வசதிகளுடனும் அமைக்கப்பட்டுள்ள இந்த புதிய விற்பனையகத்தை லலிதா ஜூவல்லரி நிறுவனத்தின் தலைவர் கிரண் குமார் திறந்து வைத்து, முதல் விற்பனையையும் தொடங்கி வைத்தார். இக்கிளையில் தங்கம், வெள்ளி மற்றும் வைர நகைகளுக்கென தனித்தனி பிரத்தியேக தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து செய்தியாளர்களைச் சந்தித்த தலைவர் கிரண் குமார் பேசுகையில், "ஈரோட்டில் ஏற்கனவே ஒரு கிளை வெற்றிகரமாக இயங்கி வரும் நிலையில், வாடிக்கையாளர்களின் அமோக ஆதரவால் இந்த இரண்டாவது கிளை திறக்கப்பட்டுள்ளது; இங்கு செப்டம்பர் 2026-க்கான புதிய வடிவமைப்பு கொண்ட தங்க, வைர ஆபரணங்கள் பெருமளவில் குவிக்கப்பட்டு உள்ளன. வாடிக்கையாளர்களின் வெளிப்படைத்தன்மைக்காக நகைகளைப் புகைப்படம் எடுக்கவும், எஸ்டிமேட் சீட்டு பெற்று பிற கடைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும் முழு சுதந்திரம் வழங்கப்படுகிறது.திறப்பு விழா சலுகையாக தங்கத்திற்கு கிராமுக்கு 2 சதவீத சிறப்புத் தள்ளுபடி, வைர நகைகளுக்கு ரூ.12,000 வரை குறைவு மற்றும் 99 சதவீத வெள்ளிப் பொருட்களுக்குச் செய்கூலி, சேதாரம் முற்றிலும் ரத்து செய்யப்பட்டுள்ளது. வாடிக்கையாளர் கருத்துக்களை அறியப் புகார் புத்தகமும் வைக்கப்பட்டுள்ளது," எனத் தெரிவித்தார். மேலும் தங்க விலை உயர்வு குறித்துப் பேசிய அவர், அது சர்வதேச சந்தை நிலவரத்தைப் பொறுத்தது என்றாலும், தங்க முதலீடு எப்போதும் பாதுகாப்பானது எனக் குறிப்பிட்டார். இந்நிகழ்வில் நிறுவனத்தின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் ஏராளமான வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டம், இ.சி.ஈ அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி கலையரங்கத்தில் நடைபெற்ற அரசு விழாவில் 561 பயனாளிகளுக்கு ரூ.475.64 இலட்சம் மதிப்பில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் மரு.வி.கே.ராஜீவ் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத்சிங், இ.ஆ.ப., அவர்கள், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.மா.வீராசாமி அவர்கள், தென்காசி சார் ஆட்சியர் திருமதி.வைஷ்ணவி பால், இ.ஆ.ப., அவர்கள், திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை முனைவர் ஆ.ரா.சிவராமன் அவர்கள், புளியங்குடி நகர்மன்ற தலைவர் திருமதி. விஜயா சௌந்திர பாண்டியன் அவர்கள், மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் திரு.தி.உதயகிருஷ்ணன் அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் (13.10.2026) அன்று மண்டலம் 3, வார்டு எண் 45, கோவிந்தராஜ் வீதி பகுதியில் வீடு வீடாக சென்று குப்பைகளை தரம் பிரித்து சேகரிக்கும் பணிகளை ஆய்வு மேற்கொண்டார். உடன் மாநகரநல அலுவலர் மரு.கௌரி சரவணன், சுகாதார அலுவலர் தங்கராஜ், சுகாதார ஆய்வாளர் அபிநயா உட்பட மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டம், பனகஹள்ளி கிராமம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி வளாகத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மற்றும், பவானிசாகர் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.தமிழ்செல்வி , ஆகியோர் நேற்று (14.10.2026) பெற்று, குறைகளை கேட்டறிந்தார்கள். உடன் கோபிசெட்டிபாளையம் வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா உட்பட பலர் உள்ளனர்.

# ஈரோட்டில் பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறை ஒப்பந்ததாரர்கள் சங்க மண்டலக் கூட்டம்: நிலுவைத் தொகையை விடுவிக்க வலியுறுத்தல்



*தமிழ்நாடு பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறை ஒப்பந்ததாரர்கள் நலச் சங்கத்தின் கோவை மண்டலத்திற்கு உட்பட்ட ஒன்பது மாவட்டங்களை உள்ளடக்கிய முதல் மண்டலப் பொதுக்கூட்டம் ஈரோடு ரோட்டரி சிடி அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மண்டலத் தலைவர் தில்லைராஜன் தலைமை வகிக்க, ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டத் தலைவர் உதயகுமார் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். சங்கத்தின் மாநிலத் தலைவர் செல்வம் சிறப்புரையாற்ற, மக்கள் சிந்தனைப் பேரவை தலைவர் ஸ்டாலின் குணசேகரன், முதல்நிலை ஒப்பந்ததாரர் நடராஜன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். மாநில பொதுச்செயலாளர் கார்மேகம், ஈரோடு திருப்பூர் மாவட்டத் தலைவர் உதயகுமார் ஆகியோர் முன்னிலையில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசுகையில், தமிழகத்தில் பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறையில் ஒப்பந்த அடிப்படையில் முடிக்கப்பட்ட 80 சதவீதப் பணிகளுக்கு உரிய பணத்தை விடுவிக்காமல் அரசு நிறுத்தி வைத்துள்ளது. இதனால் கடந்த நான்கு மாதங்களாக ஒப்பந்ததாரர்கள் கடுமையான மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். மேலும், பத்து லட்சம் ரூபாய் மதிப்பிலான உள்ளூர் பணிகளுக்கும், போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கும் ஆஃப்லைன்டெண்டர் முறையை அமல்படுத்தாமல், ஆன்லைன் முறையைக் கொண்டுவந்து ஒப்பந்ததாரர்களின் பணிச் சுமையையும் வாய்ப்புகளையும் அரசு பறித்துள்ளது. கட்டுமானப் பொருட்களின் விலை 40 முதல் 70 சதவீதம் வரை உயர்ந்துள்ள நிலையில் அரசு அதனைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டது. தமிழகம் முழுவதும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ஒப்பந்ததாரர்கள் பணிபுரிந்து வரும் சூழலில், தரக்கட்டுப்பாட்டைப் பரிசோதிக்க நான்கு அதிகாரிகள் மட்டுமே உள்ளதால் தேவையற்ற தாமதமும் பாதிப்பும் ஏற்படுகிறது. அரசு உடனடியாக ஒப்பந்ததாரர்களை அழைத்துபேச்சுவார்த்தை நடத்தி நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால், மாநில அளவில் காலவரையற்ற உண்ணாவிரதம் மற்றும் வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தப்படும் என எச்சரித்தனர்.*

*இக்கூட்டத்தில் மாநில கௌரவத் தலைவர் பழனிவேல், மாநில துணைத் தலைவர்கள் மோகன், சிவகுமார், மாநிலச் செயலாளர் சுரேஷ்குமார்,*

*மாநிலப் பொருளாளர் மகேந்திரன், மாநில இணைச் செயலாளர் கோபாலகிருஷ்ணன், மாநில துணைச் செயலாளர் சரபோஜி, மாநில மக்கள் தொடர்பு அலுவலர் பத்மநாபன், மண்டலச் செயலாளர்கள் பொன்னுசாமி, மதுசூதனன், முருகானந்தம், ஈரோடு திருப்பூர் மாவட்டச் செயலாளர் தனபால், பொருளாளர் மோகனசுந்தரம், கோவை நீலகிரி மாவட்ட நிர்வாகிகள் பாலசந்திரன், சரவணன், மகாலிங்கம், சேலம் மாவட்ட நிர்வாகிகள் மோகன், கார்மேகம், காமராஜ், கரூர் மாவட்ட நிர்வாகிகள் சதீஷ்குமார், கதிரவன், முருகானந்தம், நாமக்கல் மாவட்ட நிர்வாகிகள் மகேந்திரன்,*

*சரவணன், நாகராஜன், தருமபுரி மாவட்ட நிர்வாகிகள் சின்னமுத்து, குமார், வேடியப்பன, கிருஷ்ணகிரி மாவட்ட நிர்வாகிகள் அழகேசன், மதுசூதனன், பிரவீன் குமார் உள்ளிட்ட மாநில, மண்டல மற்றும் மாவட்ட நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர். கூட்டத்தின் நிறைவாக ஈரோடு திருப்பூர் மாவட்டச் செயலாளர் தனபால் நன்றி கூறினார்.*



ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் (13.10.2026) அன்று மண்டலம் 3, வார்டு எண் 45, பெரியார் நகர் பகுதியில் வீடு வீடாக சென்று குப்பைகளை தரம் பிரித்து சேகரிக்கும் பணிகளை ஆய்வு மேற்கொண்டார். உடன் மாநகர நல அலுவலர் மரு.கௌரி சரவணன், சுகாதார அலுவலர் தங்கராஜ் , சுகாதார ஆய்வாளர் அபிநயா உட்பட மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டம், பனகஹள்ளி கிராமம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி வளாகத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி பவானிசாகர் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.தமிழ்ச்செல்வி , ஆகியோர் (14.10.2026) வழங்கினார்கள். உடன் கோபிசெட்டிபாளையம் வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டம், பனகஹள்ளி கிராமம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி வளாகத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் அரசுத் துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கருத்துக்காட்சி அரங்குகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (14.10.2026) பார்வையிட்டார். உடன் கோபிசெட்டிபாளையம் வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா உட்பட பலர் உள்ளனர்.

# FrankfurtDelhi Air India flight diverted to Jaipur after hijacking alert, probe on

*An Air India flight from Frankfurt to Delhi was diverted to Jaipur and made an emergency landing at Jaipur International Airport on Wednesday morning after the pilot issued a hijacking alert, according to Directorate General of Civil Aviation (DGCA) sources. The aviation regulator is probing the incident.*



*Flight AI 2030, operated by a Boeing 787-9 aircraft, landed safely and was moved to a designated isolation bay for security checks, the sources said.*

*According to DGCA sources, the aircraft was squawking transponder code 7500, the internationally recognised aviation code for hijacking or unlawful interference. The alert issued by the pilot-in-command (PIC) was received by Air Traffic Control (ATC), following which the flight was diverted to Jaipur.*

*The aircraft has since been cleared by the authorities, and passengers are expected to board soon, DGCA sources said.*

*"Air India flight AI2030 operating from Frankfurt to Delhi on 14 October was diverted to Jaipur following a perceived security concern. The aircraft landed safely in Jaipur. The relevant security agencies carried out the necessary checks and have cleared the aircraft and crew. All passengers were disembarked, underwent security checks, and have since reboarded the aircraft. The flight is expected to continue its journey to Delhi shortly," Air India said in a statement.*

*However, police sources said the emergency landing followed a bomb threat. assistant commissioner of police, Malviya Nagar, Shiv Dayal told PTI that airport authorities had informed the police about the emergency landing of the Frankfurt-Delhi flight following a reported bomb threat.*

*After landing, the aircraft was escorted to a designated isolation bay, where security personnel conducted checks. Both pilots and passengers were deplaned in a phased manner under security supervision, according to preliminary information.*

*Ground teams from the Anti-Terrorism Squad (ATS), airport security agencies and local police were involved in the security operation. Passengers and their baggage were screened as part of the checks. The National Security Guard (NSG) was also placed on standby in New Delhi, according to preliminary information.*

*The DGCA is investigating the incident.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.